பருப்பு இல்லாமல்
கல்யாணமா!
கஜபதி இல்லாமலும்
கல்யாணமா!
நினைவுகள் மறப்பதில்லை
★
'கஜபதி'
(காரை நகர்)
[28836]

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

பருவத்தின் வசந்தங்கள்
அந்த நிஜங்கள் நிழலாகி
அத்தனையும் வண்ணத்தில்
நிழற்பட மாகிவிட
நினைவுகள் மறப்பதில்லை
★
'கஜபதி'
(காரை நகர்)
[28836]

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 04 திங்கட்கிழமை (17 – 01 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 51

# யுத்த ஆண்டை அரசு பிரகடனப்படுத்தியுள்ளது
# அதனை எதிர்கொள்ள சகலரும் தயாராகுவோம்!

## கேணல் கிட்டுவின் நினைவுக் கூட்டத்தில் தமிழீழ மக்களுக்கு கரிகாலன் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 17

"ஸ்ரீலங்கா அரசு இந்த ஆண்டை ஒரு யுத்த ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது; அதற்காகவே சமாதான முயற்சிகள் அனைத்தையும் அரசு முறியடித்து வருகிறது. எனவே வரவிருக்கும் எதிரியின் மிகப் பெரிய படை எடுப்பை எதிர் கொள்ள நாம் தயாராகுவோம்."

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் இவ்வாறு தமிழீழ மக்களுக்கு அழைப்பு விடுத்தார். கேணல் கிட்டுவின் முதலாம் ஆண்டு நினைவுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

வங்கக் கடலில் இந்திய அரசின் சதியால் பலியான கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் நினைவு நாள் அஞ்சலிக்கூட்டம் நேற்று இரவு 7 மணியளவில் வல்வை அம்மன் கோயில் வீதியில் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையிலேயே திரு. கரிகாலன் முன் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

பல சமாதான தூதுக் குழுக்களைச் சேர்ந்தோரும் மற்றும் ஆயர்கள், வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள், சிங்களப் பத்திரிகையாளர்கள் எனப் பலரும் இங்கு வந்து சென்றுள்ளனர். அவர்களிடம் எல்லாம் எமது நல்லெண்ணத்தை — சமாதானத் தீர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப......கொழுந்துப் பிரச்சினை கொழும்புக் கோட்டுக்கு வந்துட்டுது......!

## யாழ். ஆஸ்பத்திரி
## பாதுகாப்பு வலயம் மீதான தாக்குதல் குறித்து முறையீடு

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ். ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயம் மீது நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல் குறித்து பாதுகாப்பு அமைச்சுக்கு முறையீடு செய்யப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு யாழ். அலுவலக அதிகாரி திரு செற்றிக் பிரலா ஷெல் விழுந்த இடங்களை நேற்றுப் பார்வையிட்டதுடன் இது விடயமாக தமது கொழும்பு அலுவலகத்துக்கு தகவல் அனுப்பியுள்ளார்.

கொழும்பு அலுவலக அதிகாரிகள் தாக்குதல் சம்பவம் குறித்து பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவதாகவும்—

இதுபற்றிய மேல் விவரம் இன்று கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## கொழும்பு மாவட்ட நீதிமன்றில்
## செல்லச்சாமியின் மனுவுக்கு எதிராக தொண்டா மனு

கொழும்பு, ஜன. 17

இ. தொ. காவின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து எம். எஸ். செல்லச்சாமியை தற்காலிகமாக நீக்குவது என்று அக்கட்சியின் தேசிய சபை மேற்கொண்ட முடிவுக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடை உத்தரவை ஆட்சேபித்து மற்றொரு மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இ. தொ. கா. தலைவர் தொண்டமான் மற்றும் உபதலைவர் சார்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த புதனன்று கொழும்பு மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிபதி ஏ. எம். சோமவன்ஸ முன்னிலையில் இது எடுக்கப்பட்டது.

அடுத்த நாள் வியாழக்கிழமை கொழும்பு மாவட்ட மேலதிக நீதிபதி திரு. மாநாம திலகரத்ன முன்னிலையில் மனு மீதான விசாரணைகள் நடைபெறவிருந்தன. (உ-3)

## எழுச்சி பொங்க, உணர்வு பூர்வமாக கிட்டு நினைவு தினம் அனுஷ்டிப்பு

### பல இடங்களில் "அகத்" கப்பல் மாதிரிகள்
### 45 அடி உயர "கட்அவுட்"டும் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 17

வங்கக் கடலில் காவியமான தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் முதலாவது நினைவு நாள் நேற்று தமிழீழம் எங்கும் மிக எழுச்சியுடன் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் அமைக்கப்பட்டிருந்த நினைவுப் பந்தல்களில் வீரச்சாவடைந்த போராளிகளின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றுக்கு ஈகைச்சுடர் ஏற்றியும், மலர் மாலை சூட்டியும் அஞ்சலி செலுத்தும் வைபவங்கள் சிறப்பாக நடைபெற்றன. இந்த நிகழ்வுகளில் விடுதலைப் புலிகள் பிரமுகர்களும், வீரச்சாவடைந்த போராளிகளின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்த நினைவுப் பந்தல்களுக்கு ஏராளமான மக்களும் சென்று கேணல் கிட்டு மற்றும் ஒன்பது போராளிகளின் உருவப் படங்களுக்கு மலர் தூவியும், மாலை சூட்டியும் அஞ்சலி செலுத்தினர்.

பல இடங்களில் கேணல் கிட்டுவின் பலஅடி உயரமான "கட்அவுட்" டுகளும் வைக்கப்பட்டிருந்தன.

அதேபோல அவ்வப்குதி குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களில் கிட்டுவும் மற்றும் வேங்கைகளும் பயணம் செய்த "அகத்" கப்பலின் மாதிரிகள் ஓடவிடப்பட்டன. அந்தக் கப்பலை இந்தியக் கப்பல் வழிமறிக்கும் காட்சியும் பல இடங்களில் தத்ரூபமாக காண்பிக்கப்பட்டது. அவற்றை பெரும் எண்ணிக்கையான மக்கள் பார்த்தனர்.

கேணல் கிட்டு நினைவு தினத்தை முன்னிட்டு குடாநாடு எங்கும் எழிற்கோலம் பூண்டிருந்தது வீதிகள், சந்திகள் தோறும் மஞ்சள் சிவப்பு வர்ணக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. எழுச்சி கோஷங்கள் கொண்ட பதாகைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.



### யாழ். நகரில்

யாழ். புதிய பஸ் நிலையத்தில் சிற்றூர்திகள் சேவைச் சங்க வளவில் நிரந்தரமான நினைவுக் கொட்டகை அமைக்கப்பட்டு கேணல் கிட்டுவின் ஆறடி உயர திருவுருவப்படமும் ஏனைய 9 போராளிகளின் திருவுருவப் படங்களும் திரைநீக்கம் செய்யப்பட்டன.

யாழ். நகரப் பகுதியில் உள்ள ஒரு குளத்தில் கேணல் கிட்டுவும் ஏனைய போராளிகளும் பயணம் செய்த "அகத்" கப்பலின் மாதிரி மிதக்கவிடப்பட்டிருந்தது. அது செலுத்தியும் காண்பிக்கப்பட்டது.

### வடமராட்சியில்

வங்கக் கடலில் இந்திய அரசின் சதியில் சிக்கி காவியமான கேணல் கிட்டு மற்றும் 9 வேங்கைகளின் நினைவு அஞ்சலி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றும் நாளையும் படகுச் சேவை

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்றும் நாளையும் வழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

வழமைபோல் தொடர்ந்து வாரத்தில் திங்கள், செவ்வாய், வெள்ளி என மூன்று நாட்கள் படகுச் சேவை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## விடுதலைப் புலிகளுக்கு
## பிரதமர் விடுத்த அழைப்பு சந்தேகத்துக்கு இடமானது

### பி. பி. ஸி விமர்சனம்

லண்டன், ஜன. 17

போர் நிறுத்தம் ஒன்றை அறிவிக்காமல்—

புதிய இராணுவத் தளபதியின் தாக்குதல் முஸ்திபு அறிவித்தலின் பின்னணியில்—

அரசமைப்புத் தெரிவுக்குழுவுக்கு யோசனைகளைச் சமர்ப்பிக்கும்படி விடுதலைப் புலிகளுக்கு பிரதமர் ரணில் அழைப்பு விடுத்திருப்பது உண்மையில் அவர்களுடன் பேசுவதற்குத்தானா எனப் பலரும் சந்தேகம் எழுப்பியிருப்பதாக பி. பி. ஸி. குறிப்பிட்டது.

அரசமைப்புத் திருத்தம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் உறுப்பினரும் சு. கவின் கொழும்பு மாவட்ட எம். பியுமான ஸ்ரான்லி திலகரத்தினா பிரதமரின் அழைப்புக் குறித்து கூறியதாவது:-

அழைப்புக்கு முதல் ஏதாவதொரு நிலைப்பாட்டுக்கு வருதல் வேண்டும். பேச்சு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 9 ஆயிரம் பரல் மண்ணெண்ணெய் இன்னும் ஒரு வாரத்தில் வரும்

யாழ்ப்பாணம், ஜன. 17

குடாநாட்டிற்கான — டிசம்பர், ஜனவரி மாதங்களுக்குரிய கோட்டாவான — 9 ஆயிரம் பரல் மண்ணெண்ணெயுடன் 'மாஹோ' கப்பல் இன்னும் ஒரு வாரத்தில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பருத்தித்துறையில் பொருள்களை இறக்கி முடித்த பின்னர் நேற்று முன்தினம் பயணிகளுடன் திருகோணமலைக்குச் சென்ற, இக் கப்பல் அங்கிருந்து கொழும்பு செல்லும் என்றும் —

அங்கு மண்ணெண்ணெய் ஏற்றிக் கொண்டு ஒரு வாரத்தில் இக்கப்பல் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்று தெரிவிக்கப்பட்டது.

மாதம் ஒன்றுக்கு 4 ஆயிரத்து 500 பரல் மண்ணெண்ணெய் யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. (உ-3-173)

## 'ருகுணு' இன்று வந்து சேரும்

யாழ்ப்பாணம், ஜன. 17

பருத்தித்துறைக்கு இன்று வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் 'ருகுணு' கப்பலில் இருந்து உடனடியாகப் பொருள்கள் இறக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு தேவையான உரம், மற்றும் யாழ். செயலக திருத்த வேலைகளுக்கான கட்டடப் பொருள்களும் இக்கப்பலில் எடுத்து வரப்படுகின்றன.

ஜனவரி மாதத்துக்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும் இக்கப்பலில் எடுத்து வரப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3)

## வடபகுதியில் மற்றுமொரு
## கொடூரமான மோதலுக்கு ஆயத்தங்கள் நடக்கின்றன

லண்டன், ஜன. 17

இலங்கையின் வடபகுதியில் மற்றுமொரு கொடூரமான மோதலுக்கு ஆயத்தங்கள் நடக்கின்றன.

—இவ்வாறு பி. பி. ஸி. குறிப்பிட்டது.

தற்போதைய நிலைமை குறித்து பி.பி.ஸி. மேலும் தெரிவித்ததாவது:-

இனி நடத்தப்படவிருக்கும் தாக்குதலுக்காக கூடுதலான துருப்புகள் வடக்குக்கு அனுப்பப்பட்டுவருவதாக புதிய இராணுவத்தளபதி தெரிவித்துள்ளார்.

வடக்கில் பெய்த கடும் பருவ மழை இருதரப்பினரையும் எட்ட வைத்திருந்தது. ஆனால் பருவ மழை இனி நின்று விடும்.

இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் 10 ஆண்டு காலப் போரில்—

இன்னோர் கொடூரமான மோதலுக்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இதனால் இந்தவேளையில், பிரதமரின் சமாதான அழைப்பு மறக்கப்பட்டுவிடும் என்பதற்கான அறிகுறிகள் தான் தென்படுகின்றன. (உ-3-6)

## எதிர்க்கட்சிகளின் வசமுள்ள
## மேலும் இரு மாகாண சபைகளை கலைப்பதற்கு ஐ.தே.க. முயற்சி!

கொழும்பு, ஜன. 17

நாடாளுமன்றத் தேர்தல் இந்த ஆண்டின் நடுப்பகுதியில் நடைபெறவுள்ளது என்றும் —

அதற்கு முதல் எதிர்க்கட்சி நிர்வாகத்தில் உள்ள மூன்று மாகாணசபைகளையும் கைப்பற்றும் திட்டம் ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சி தயாரித்து செயல்படுத்த ஆரம்பித்துள்ளதாகவும் —

கொழும்பு ஆங்கில வார இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

இதன் முதற் கட்டமாகவே தென் மாகாண சபை கலைக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

"ஒப்பரேஷன் பிரான்ஸிஸ்கு" என்ற பெயரில் இந்த கலைப்புத்திட்டம் நிறைவேற்றப்பட்டதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

விமல் பிரான்ஸிஸ்கு என்ற பெயருடைய எதிர்க்கட்சி மாகாணசபை உறுப்பினரைக் கடத்தியதன் மூலம் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

இது போன்ற ஒரு திட்டத்தை நிறைவேற்றி எதிர்க்கட்சி நிர்வாகத்தில் உள்ள வடமேற்குமாகாணசபையைக் கைப்பற்ற ஐக்கிய தேசியக் கட்சி முயற்சித்து வருவதாக வதந்திகள் வெளியாகி உள்ளன.

இது தொடர்பாக வடமேற்கு மாகாண ... சேர்ந்த ஐக்கிய ...

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சு. கவின் தமிழ் எம். பி. காலமானார்

கொழும்பு, ஜன. 17

சுதந்திரக்கட்சியின் தேசியப்பட்டியல் மூலம் 1989 முதல் நாடாளுமன்ற உறுப்பினராக பணிபுரிந்து வந்த—தமிழரான—திரு. ரி. டபிள்யு. ராஜரத்தினம் நேற்று முன்தினம் காலமானார். அவர் உயர்நீதிமன்ற நீதியரசராக கடமையாற்றி ஓய்வு பெற்றவர் ... (உ-ஏ)

## போரை தவிர்க்கும் அவசியத்தை சிங்களவருக்கு உணர்த்துவோம்

### சமாதான மாநாட்டு ஏற்பாட்டாளர் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 17

யுத்தத்தைத் தவிர்க்கும் அவசியத்தை சிங்கள மக்களுக்கு உணர்த்துவோம். அந்த நோக்கத்துடன் செயற்படுவோம்.

கொழும்பில் சமாதான மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தவர்களில் ஒருவரான விஜேசிறிவர்த்தனா இவ்வாறு கூறினார்.

பத்திரிகையாளர்கள், கலைஞர்கள், புத்திஜீவிகள் ஆகியோரால் கொழும்பில் சமாதான மாநாடு ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது தெரிந்ததே.

இந்த மாநாட்டு ஏற்பாடுகளில் கலைஞர்களின் அழைப்பாளராகச் செயற்பட்ட திரு. விஜேசிறிவர்த்தனா மேலும் கூறியதாவது:-

போர் நிறுத்தப்பட வேண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


விற்பனைக்கு

அலுமாரி, சோக்கேஸ், டிரெஸிங்ரேபிள், இரண்டு லாச்சி மேசை, ஒற்றை லாச்சி மேசை, ஸ்ரூல், கட்டில்கள், மெத்தைகள், விறாக்கிகள், கதவுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 7, கைலாசபிள்ளையார் பின் வீதி, நல்லூர். (28931)

Yamaha 2000 (2 K V) ஜெனரேற்றரும், Briggs & Stratton நீர் இறைக்கும் இயந்திரமும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: யூட் போட்டோ, இல. 51, 4-ஆம் குறுக்கு வீதி, சின்னக் கடை. (சி-6967)

உயர் இன ஜேர்மன் செப்பேட் அல்சேஷன் ஆண், பெண் நாய்கள், பொமனேரியன் நாய், நாய்க்கூடு, முட்டையிடும் பண்டம் கோழிகள், ஐந்து மாதக் குஞ்சுகள், கோழிகள் வளர்க்க உகந்த கூடும் உடன் விற்பனைக்கு உண்டு. இல. 27, முதலாம் ஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரி (சாவகச்சேரி, இந்துக் கல்லூரிக்கு பின்னால்). (28950)

பழங்கள் தேவை

உங்கள் வீட்டுத்தோட்டங்களில் உள்ள பசன் பழங்களையும், பப்பாசிப் பழங்களையும் நாம் கொள்வனவு செய்கின்றோம். Taste Line Industries (Pvt ) Ltd., 14, Seenier Lane, Jaffna. (28797)

புறொயிலர் குஞ்சுகள்

பிறிமா லோமன் புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (28952)


## வீரசேகராவுக்கு பதவி நீடிப்பு

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகமாகப் பதவிவகிக்கும் பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவுக்கு மேலும் ஒரு வருட காலம் பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி விஜேதுங்க இச் சேவை நீடிப்பு வழங்கும் உத்தரவை வெளியிட்டார். (உ-எ)

## 66 குடும்பங்களுக்கு உதவி

தென்மராட்சி, ஜன. 17

யாழ்தேவி இராணுவ நடவடிக்கைகளினால் தமது உடைமைகளை இழந்து கிளாலிப் பகுதியில் தங்கியுள்ள 66 குடும்பங்களுக்கு சமையல் பாத்திரங்களை ஐக்கிய நாடுகள் சிறுவர் பராமரிப்பு நிதியத்தின் உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழக பளைப் பிரிவினர் வழங்கினர்.

இதேவேளை இவ் இராணுவ நடவடிக்கையால் வீடுகளை இழந்து நிர்க்கதியாக பாடசாலைகளிலும் வேறு இடங்களிலும் தங்கியுள்ள மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களைச் சேகரித்து வருகின்றனர். (த-117)

## சைவசமய அறிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன 17

வண்ணை - சாந்தையர் மடம் கற்பக விநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக் கழகம் கடந்த 40 வருடங்களாகப் பாடசாலை மாணவர்களுக்கு இடையே சைவ சமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு நடத்திவரும் சைவசமய அறிவுப் பரீட்சையையும், செயல்முறைப் போட்டியையும் இவ்வருடமும் நடத்தவுள்ளது.

பரீட்சைகளிலும், போட்டிகளிலும் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-162)

## ஆடு வளர்ப்பு

வலிகாமம் தெற்கு, ஜன 17

ஜனசக்தி திட்டத்தின் கீழ் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட நவாலி கிராமத்தில் ஆடு வளர்ப்புக்காக தெரிந்தெடுக்கப்பட்ட பன்னிரண்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு நல்லின ஆடுகள் வழங்கப்பட்டன. (த-152)


### சப்ளை ஆட்கள் தேவை

மேற்குறிப்பிட்ட வேலைக்கு உடனடியாக ஆட்கள் தேவை 19 - 01 - 1994 புதன்கிழமை முற்பகல் 10.00 மணியிலிருந்து 12-00 மணி வரை நேரில் வரவும். அனுபவச் சான்றிதழ் இருப்பின் கொண்டு வரவும்.

நியூ மலாயன் உணவகம்,
625, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
[28963]


### ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 08 — 07 — 1955

உதிர்வு: 24 — 01 — 1988

திருமதி
**காயத்திரி ஆனந்தரமணி தர்மசோதி**
(விஞ்ஞான ஆசிரியை, ம/காக்கையன்குளம் மகா வித்தியாலயம்)

திதி: 17 — 01 — 1994 (திங்கட்கிழமை)

ஆண்டு ஆறு மறைந்ததம்மா!
ஆறுமோ எம்மனம் ஆறாதம்மா!!

தங்கள் பிரிவால் நலிவுறும்;
கணவன், பிள்ளைகள், பெற்றோர்,
சகோதரி, சகோதரர்கள்,
மைத்துனர்கள், மைத்துனிகள்,
மற்றும் உன் அன்பால் ஈர்க்கப்பட்ட
உறவினர்கள், நண்பர்கள்.

''ஸ்ரீசாவினி''
காங்கேசன்துறை வீதி,
இணுவில். [28936]

### 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12 — 09 — 1921

மறைவு: 17 — 01 — 1978

**A. K. ஆறுமுகம்தம்பி**
(Station Superintendent. C. G. R. Maradana)

ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்களை அன்புடன் நினைவு கூரும்.

உங்கள் மனைவி கமலா,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள்,
மருமக்கள்.

274, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம். (28875)

### பாசப்பிணைப்பில் 31ஆம் நாள்



அன்னை மடியில் 01 — 05 — 1932

விதியின் மடியில்: 18 — 12 — 1993

**அமரர் கனகம்மா கந்தையா**

வான தேவதைகள் ஒரு கணம் திகைத்து நின்றதேன்
வண்ண நிலவும் அக்கணம் ஒளி வீச மறந்ததேன்
கொண்ட நோய் கண்டுணர நாள் பல வாயின
எங்கு நேர்ந்த தவறோ விதியாய் முடிந்ததே!

கணவன், பிள்ளைகள், மருமகள்,
பேர்த்தி, சகோதரர்கள்,
உறவினர்கள்.

பாலாவோடை,
இணுவில் தெற்கு,
இணுவில். (28962)

# இந்தியப்படையை அழைப்பது பற்றி பேச அமைச்சர் ஹமீத் அங்கு செல்லவில்லை

## பத்திரிகைச் செய்திகளுக்கு அரசு மறுப்பு

கொழும்பு, ஜன. 17

வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீது இம்மாதம் இந்தியாவுக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளும்போது இந்திய அமைதிகாக்கும் படையை இலங்கைக்கு மீண்டும் அழைப்பது குறித்து இந்தியத் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தவிருக்கிறார் என்று பத்திரிகைகளில் வெளியான அறிக்கைகளை வெளியுறவு அமைச்சு முற்றாக மறுத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனைக் கைது செய்வதற்காக வட பகுதியில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்திய அமைதிகாக்கும் படையை அழைக்கும் சாத்தியம் பற்றி அமைச்சர் ஹமீது பேசுவார் என்றும்—

இந்த விஷயம் சம்பந்தமாக அமைச்சர் ஹமீது ஐ. நா. அதிகாரிகளுடன் பின்னர் ஆலோசனை நடத்துவார் என்றும் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த விஷயத்தை இந்திய இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் கூட்டத்தின் போது விவாதிக்க இலங்கை அரசு திட்டமிட்டது என்றும்—

ஆனால் இந்தியா இதனை விரும்பவில்லை என்றும் ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இவை அனைத்தும் எவ்வித ஆதாரமுமற்ற மக்களைத் தவறான வழியில் இட்டுச் செல்லக்கூடிய — செய்திகளாகும் என்று வெளியுறவு அமைச்சு தெரிவித்து உள்ளது.

அமைச்சர் ஹமீது இந்திய-இலங்கை ஆணைக்குழுக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக நேற்றும் இன்றும் இந்தியாவில் விஜயம் ஒன்றை மேற்கொள்வதாக இருந்தார்.

கூட்டு ஆணைக்குழுவின் கூட்டங்கள் ஆண்டு தோறும் நடத்தப்படுபவை. இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் சந்தித்து உபகுழுக்களின் அலுவல்கள் பற்றி ஆராய்வதற்காகவே இந்தக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

இந்திய அரசின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த வருட கூட்டங்களுக்கான திகதிகள் பின்போடப்பட்டுள்ளன. இரு நாடுகளும் கலந்துரையாடி கூட்டங்களுக்கான புதிய திகதிகளை நிர்ணயித்துக் கொள்ளும் — இவ்வாறு வெளியுறவு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (உ-எ)

## ஆலயங்களில்

மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலய மணவாளக் கோல நவோத்தர சகஸ்ரமகா சங்காபிஷேக விழா இன்று திங்கட்கிழமை நடைபெறும். [க-135]

★ ★ ★

அச்சுவேலி, ஜன 17

உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார் ஆலய சகஸ்ர அஷ்டோத்தர சங்காபிஷேகம் நளை செவ்வாய்க்கிழமை நடைபெறும். இரவு சமயச் சொற்பொழிவுகளும் விசேட உற்சவமும் இடம் பெறும். (உ-11)

## தடுப்பு மருந்துகளை எடுத்துச் செல்லத்தடை

யாழ்ப்பாணம், ஜன. 17

வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு தொற்றுநோய்த் தடுப்பு மருந்துகளை எடுத்துச் செல்வதற்கு ஸ்ரீலங்கா அரசு அனுமதி வழங்காது பின்னடித்து வருகிறது.

இதனால் அப்பகுதிகளில் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக் காலத்தில் பெய்த கடும் மழை காரணமாக வயிற்றுளைவு, வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல் நோய்களுக்கு மக்கள் இலக்காகியுள்ளனர்.

இதனிடையே, வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள வைத்திய சாலைகளில் போதிய அளவு மருந்துகள் காணப்படுகின்றன.

ஆனாலும் மக்கள் அப்பகுதிக்கு பயத்தின் காரணமாகச் செல்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## கூட்டுறவுத் திணைக்களம் மார்ச் மாதம் மூடுவிழா

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ் கூட்டுறவு திணைக்களம் மார்ச் மாதத்துடன் மூடப்படவிருக்கிறது.

கூட்டுறவு திணைக்கள வேலைகளைப் பன்முகப்படுத்தும் திட்டத்தின் கீழ் அத்திணைக்களத்தின் நடவடிக்கைகள் தற்சமயம்பிரதேச செயலகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டு வருவதாகவும் —

இத்திணைக்களத்தில் பணியாற்றிய பெரும்பாலானவர்கள் பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு வருவதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

மார்ச் மாதத்தில்—திணைக்கள வேலைகள் பிரதேச செயலகங்களுக்கு முற்றாக ஒப்படைக்கப்பட்டதும் — திணைக்களம் மூடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## சந்திரிகாவை பயமுறுத்திய 4 அரசியலவாதிகள் மீது வழக்கு தொடர உத்தரவு

மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்காவை பயமுறுத்தி அவதூறாகப் பேசிய முறைப்பாடு தொடர்பாக நான்கு அரசியல்வாதிகள்மீது வழக்குத் தாக்கல் செய்யும்படி சட்டமா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

திஸ்ஸமகாராமவின் முன்னாள் சு. க. அமைப்பாளர் மெர்வின் சில்வா, டாக்டர் ராஜிதா சேனரத்னா, ரவீந்திரலால் பெரேரா, இந்திர சிறி ஆகியோர் மீதே வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

இது தொடர்பாக திருமதி குமாரணதுங்க கறுவாக்காட்டுப் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். (த-எ)


### தேவை

வரை படங்களை நேர்த்தியாக கீறக் கூடியவர்களும், கட்டட மாதிரி உருவமைக்கக் கூடியவர்களும் உடன் விண்ணப்பிக்கவும். விண்ணப்பத்தில் தராதரம், அனுபவம் என்பவற்றை குறிப்பிடவும்.

விளம்பர இல. 591.
C/o உதயன்,
யாழ்ப்பாணம்.
[28965]

### விற்பனை முகவர்கள் தேவை

சுரபி உணவு பதனிடல் நிறுவனத்திற்கு
✻ வலிகாமம்
✻ வடமராட்சி
✻ தென்மராட்சி
ஆகிய பிரதேசங்களிலே பணியாற்றக்கூடிய விற்பனை முகவர்கள் தேவைப்படுகின்றனர்.

சுரபி உணவு பதனிடல் நிறுவனம்,
இருபாலை, கோப்பாய்.

குறிப்பு:
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
[சி-6976]


## வவுனியாவில் கெடுபிடி: லொறிகளை தம்பாவனைக்கு எடுத்துச்செல்லும் படையினர்

யாழ்ப்பாணம், ஜன. 17

வவுனியா நகருக்குள் செல்லும் லொறிகளை இராணுவத்தினர் தமது தேவைகளுக்கு பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறு இராணுவத்தினரால் பயன்படுத்தப்படும் லொறிகள் பின்னர் பழுதான நிலையிலேயே லொறி உரிமையாளர்களிடம் திருப்பி ஒப்படைக்கப்படுகின்றன.

இதனால் வவுனியா நகருக்குள் லொறிகளைக் கொண்டு செல்ல லொறி உரிமையாளர்கள் அஞ்சுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதிக்கு பொருள்களை ஏற்றிச்செல்லும் லொறிகளே இவ்வாறு இராணுவத்தினரால் பயன்படுத்தப்படுகின்றன.

லொறிகளைத் தம்வசம் எடுத்துக்கொள்ளும் படையினர் அவற்றை 5 தொடக்கம் 20 நாட்கள் வரை தம்முடன் வைத்திருந்து பயன்படுத்துகின்றனராம். (உ-3)

### ஈராண்டு நினைவஞ்சலி



வந்தது: 25 — 02 — 1943

போனது: 09 — 02 — 1992

விஸ்வகர்மத்திலகர்
**அமரர் முத்துத்தம்பி இரத்தினவேலு**
(சந்தனம்)


திதி: 17 — 01 — 1994 (திங்கள்)

ஈராண்டு போனது நீங்கள்
வேறான உலகம் சென்று
நீரார்ந்த விழியுடன் நாமுமை
சோராது நினைப்போம் ஐயா!

மனைவி, மக்கள், மருமகன்.

''நாகேஸ்வரி இல்லம்'',
தேவாலய ஒழுங்கை,
ஆனைக்கோட்டை. (28951)

### ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 05 — 02 — 1921

ஐங்கரன் அடியில்: 28 — 01 — 1993

**அமரர் செ. சிவலிங்கம்**
(இளைப்பாறிய பிரதம புகையிரதநிலைய அதிபர், இடைக்காடு - அச்சுவேலி - ஆவரங்கால்)

திதி: 17-01-1994

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து கடமை, கண்ணியம், கட்டுப்பாடு வழுவாது ஒழுகி அன்புடன் வாழ்ந்த வள்ளலே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

குகன் கல்வி நிறுவனம்,
ஆவரங்கால். (28967)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
193/3, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## பிரதமரின் குதர்க்கம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, இனப் பிரச்சினை சம்பந்தமாகப் புதிய பல்லவி ஒன்றைப் பாடியுள்ளார். பல்லவி புதிது என்றாலும் ராகம், தாளம் பழையவை தான். பிரதமர் பதவியில் எட்டு மாத கால அனுபவம் தானே. அதனால் புதிய பல்லவியை தப்புத் தாளத்திலும் சுருதி பிசகியும் பாடியுள்ளார்!

தமது தலைமையில் இயங்கும் அரசமைப்புச் சீர்திருத்தம் சம்பந்தமான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம், அரசமைப்புச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளையும், அவற்றைத் திருத்துவதற்கான யோசனைகளையும் சமர்ப்பிக்குமாறு அவர் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கேட்டுள்ளார்.

இதுவே அவர் இசைத்துள்ள புதிய பல்லவி. விடுதலைப் புலிகள் யோசனைகளைச் சமர்ப்பித்தால் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அவற்றை ஆராய்ந்து அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்யும் என்றும் அவர் உறுதி அளித்திருக்கிறார்.

இவரைப் போலவே கடந்த கால் நூற்றாண்டு காலமாக சிறிமாவோ, ஜே. ஆர். பிரேமதாசா ஆகிய முந்திய தலைவர்களும் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதாக, தீர்க்கப் போவதாக கனியொழுக உறுதிமொழிகளை வழங்கினார்கள். ஆனால் நடந்தது எதுவுமில்லை. இறுதியில் ஆரம்ப இடத்திலேயே வந்து—ஒரு சுற்று வட்டம் போட்டு திரும்பி வந்து — நிற்கும் பூச்சிய நிலையே கண்ட மிச்சம். ஆகவே தமது உறுதி மொழி கண்டு தமிழர்களோ, விடுதலைப் புலிகளோ ஏமாந்து விடுவார்கள் என்று அவர் எண்ணுவது தெரியாத்தனமே!

மேலும் —

நிறைவேற்று ஜனாதிபதி முறை, விகிதாசார பிரதிநிதித்துவம் என்பன குறித்து மீளாய்வு செய்வதே அரசமைப்புச் சீர்திருத்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முக்கிய பணியாக இருக்கும் என்று அது நியமிக்கப்படும் போது தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவை குறித்து பெரிதாக அக்கறை காட்டாமல், இப்போதுள்ள அரசமைப்பின் பிரகாரம் நிறைவேற்று ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்யும் தேர்தலையும், விகிதாசார முறைப்படியே நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலையும் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அதனால் பிரஸ்தாப தெரிவுக்குழு செயலிழந்து செத்துப் போய்விட்டதாகவே கருதவேண்டியுள்ளது.

செத்துப்போன, அல்லது செத்துக் கொண்டிருக்கும் தெரிவுக்குழுவுக்கு யோசனை சமர்ப்பிக்குமாறு கேட்டு அவர் விடுதலைப் புலிகளை ஏமாற்ற முயற்சிக்கிறார் என்பது மட்டுமல்ல தன்னையும் ஏமாற்றுகிறார்.

இந்த நாட்டின் ஒற்றையாட்சி அரசமைப்பை மாற்றி இரு அரசுகள் இயங்கும் கூட்டாட்சி (Confederation) முறை, அல்லது சமஷ்டி (Federal) முறையிலான அரசமைப்புகளை கொண்டு வருமாறு தமிழர் தரப்பில் நியாயமான யோசனை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டால், தெரிவுக்குழு அதனை ஏற்றுக் கொள்ளுமா, என்ன?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் கண்டறிய நியமிக்கப்பட்ட மங்கள முனசிங்கா தெரிவுக்குழு சிங்களவர் குழுவாக மாறி, சிங்களவர்களுக்கே சாதகமான சிபார்சைக் கூறிச் செத்துப்போய் விட்டது. அது தெரிவித்த வடக்கு – கிழக்கைப் பிரிக்கும் சிபார்சை அரசு ஏற்றுக் கொள்வதாகத் தெரிவிக்கும் ரணில் விடுதலைப் புலிகளை அடுத்த குழுவுக்கு யோசனை சமர்ப்பிக்கக் கேட்பது சண்டாளத்தனமே அன்றி வேறல்ல.

விடுதலைப் புலிகள்மீது நம்பிக்கை வைக்க முடியாது என்று கூறிக்கொண்டு, அவர்களை யோசனை சமர்ப்பிக்க அழைப்பது குதர்க்கத்தனமானது.

பல்கலைக்கழக அனுமதி:

# பாதிக்கப்பட்ட மாணவர் குறித்து சட்ட ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜன. 17

பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரியுள்ளது.

கொழும்பு சென்றிருந்த யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவும், மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் எஸ் பாலசுப்பிரமணியமும், இந்த விடயம் தொடர்பாக பிரதமர், உயர்கல்வி அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா, அமைச்சுச் செயலாளர் தர்மசிறிபீரிஸ் உட்பட உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார்.

அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கடந்த ஐந்து வருட பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதியை வழங்க கடந்த வருடம் வழங்கப்பட்ட மேல் நீதிமன்ற தீர்ப்பு எதிர்மாறாக அமையுமா என்று சட்டமா அதிபரிடம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கேட்டுள்ளது.

இதேவேளை — பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிவாரணம் கிடைப்பதற்கு முயற்சிப்பதாக உயர்கல்வி அமைச்சுச் செயலர் தர்மசிறி பீரிஸ் தெரிவித்துள்ளார். (த-3-9)

## அதிரடிப்படை அதிகாரிகள் பதவி உயர்வு

யாழ்ப்பாணம், ஜன. 17

ஐந்து விசேட அதிரடிப் படை அதிகாரிகள் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

நவரட்ணா, இலங்கக்கோன், தயாஜெயசுந்தரா, உபாலிசகபந்து, நிமித்துறமே ஆகிய ஐவருமே பதவி உயர்வு பெற்றவர்களாவர்.

பகிரங்க சேவைகள் ஆணைக்குழு மேற்படி பதவி உயர்வுகளை அறிவித்துள்ளது. (இ-5)

## பிரபாவுக்கு அரசாங்கம் பயப்படுகின்றது!

### சுதந்திரக் கட்சி எம்.பி. சொல்கிறார்

கொழும்பு, ஜன. 17

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் அரசாங்கத்தை அவமானப்படுத்தியுள்ளார். அதனால் அரசாங்கம் பிரபாகரனுக்கு பயப்படுகிறது.

மாத்தறை மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பி. மஹிந்த விஜேசேகரா கந்தறையில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு கூறினார்.

''இந்த அரசாங்கம் தென் பகுதியில் மாகாணசபை உறுப்பினர்களை உருவாக்கும் காடைத்தனத்தில் ஈடுபட்டு வருகிறது. இந்த காடைத்தனத்தை வட பகுதியில் அரசாங்கத்தால் காட்ட முடியுமா? பிரபாகரனை இந்த அரசாங்கம் கடத்திப் பார்க்கட்டும்'' என்றும் அவர் கூறினார். (த-எ)

இ தொ கா விரிசல்;

## சமரச முயற்சிக்கு ஐ. தே. க. முட்டுக்கட்டை

கொழும்பு. ஜன. 17

இ. தொ காவின் இரு பிரிவுகளை சமரசமாக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளை ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள ஒரு பிரிவு திட்டமிட்டு முறியடித்து வருவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. தொண்டமானையும் இ. தொ. காவையும் பலவீனப்படுத்தும் முயற்சியாகவே இச்சதி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இ. தொ. காவின் சிரேஷ்ட அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதேவேளை —

மத்திய மாகாண சபையில் முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது, அதற்குச் சாதகமாக வாக்களிக்க மறுத்த எட்டு இ. தொ. கா. உறுப்பினர்களும் ஜனவரி 15க்கு முன் பதவி விலகாவிட்டால் அவர்கள் இ தொ. காவில் இருந்து வெளியேற்றப்படுவார்கள் என்று இ. தொ. கா. தலைவர் தொண்டமான் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-எ)

## கொமடோராக பதவி உயர்வு

கொழும்பு, ஜன. 17

இலங்கை விமானப் படையில் குரூப் கப்டனாக இருந்த ரி. பி. ரத்னாயகா இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து எயர் கொமடோராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (த-எ)

வடக்கே

# எரிபொருள் அனுப்புவது குறித்து புதிய அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ் மாவட்டத்துக்கு மாதாந்தம் ஒதுக்கப்பட்டுள்ள மண்எண்ணெய் மற்றும் எரிபொருள் வகைகளை அந்த மாதத்திலேயே கப்பல் மூலம் அனுப்ப வேண்டும். இல்லையேல் அவற்றை அனுப்புவதற்கான அனுமதி ரத்துச் செய்யப்படும்.

பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு மேற்கண்ட பணிப்புரையை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்கு விடுத்துள்ளது.

யாழ். செயலகம் மற்றும் திணைக்களங்களுக்கு மாதாந்தம் குறிப்பிட்ட தொகை எரிபொருள்களைஎடுத்துச் செல்ல பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழு அனுமதி வழங்கியுள்ளது.

அந்தப் பொருள்களை அந்த அந்த மாதத்திலேயே அனுப்ப முடியும் என்றும் —

இல்லையேல் அந்த அனுமதி ரத்தாகி விடும் என்றும் — பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட மாதத்தில் கப்பல் வசதி கிடைக்காது போவதால் இவ்வுத்தரவை மறுபரிசீலனை செய்யுமாறு யாழ். மாவட்டத்தில் உள்ள திணைக்களங்கள் கோரியுள்ளன. (த-3)

உள்ளூராட்சி தேர்தல்கள்;

## சர்வதேச அவதானிகள் எவரும் வரமாட்டார்கள்

கொழும்பு, ஜன. 17

கிழக்கிலும் வவுனியாவிலும் நடக்கவிருக்கும் உள்ளூராட்சிகளின் தேர்தலைக் கண்காணிக்க சர்வதேச அவதானிகள் எவரும் வரமாட்டார்கள்.

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா 'த ஐலண்ட்' நாளிதழுக்கு தெரிவித்தார்.

தேர்தல் காலத்தில் அவசர காலச் சட்ட ஒழுங்கு விதிகள் எதுவும் தளர்த்தப்படமாட்டாது என்றும் அவர் கூறினார்.

ரம்ழான் பெருநாள் காலம் அடுத்த மாதம் 13 ஆம் திகதி ஆரம்பமாவதால் தேர்தல் நடக்கும் திகதியை இன்னொரு நாளுக்கு ஒத்திவைக்க வேண்டும் என்று முஸ்லிம் வேட்பாளர்கள் விடுத்த கோரிக்கையை தேர்தல் ஆணையாளர் நிராகரித்துள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது. இதனிடையில் — தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி இம்மாதம் 21ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (த எ)

## நியமனப் பத்திரங்களில் பலவந்தமாக ஒப்பம்!

ஐக்கிய தேசியக்கட்சி இராணுவத்தின் உதவியுடன் சாதாரண பொதுமக்களை பலவந்தமாக நியமனப் பத்திரங்களில் ஒப்பமிடச் செய்துள்ளனர் என்று தேர்தல் ஆணையாளருக்கு முறையிடப்பட்டுள்ளது.

ஈ. பி. ஆர். எல். எவ். எம். பி. க. பிரேமச்சந்திரன் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் இவ்வாறு குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகள் ஜனநாயகத் தேர்தலுக்குச் செய்யும் துரோகம் என்றும்—

இது பற்றி உரிய நடவடிக்கைகள் எடுக்கும்படியும் அவர் தேர்தல் ஆணையாளரை கடிதமூலம் கேட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்திலும் வவுனியா நகரசபைக்கும் நடக்கவிருக்கும் தேர்தலை ஒட்டி வேட்புமனுக்கள் தாக்கல் செய்வது கடந்த புதன் கிழமை முடிவடைந்தது தெரிந்ததே. (த-எ-6)

## ஸ்ரீலங்கா விமானப்படைக்கு ரஷ்ய எம், ஐ. 17 ஹெலிகள்

### அடுத்த சில தினங்களில் இறுதி முடிவு

சோவியத் தயாரிப்பான எம். ஐ. 17 இராணுவப் போக்குவரத்து ஹெலிக்கொப்டர்களை வாங்குவது பற்றிய இறுதி முடிவை ஸ்ரீலங்கா விமானப் படையின் தலைமைப்பீடம் அடுத்த சில தினங்களில் மேற்கொள்ளவிருக்கின்றது.

அதிகாரபூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''சண்டே ஐலண்ட்'' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

மேலும் மூன்று எம். ஐ 17 ஹெலிக்கொப்டர்களை கொள்வனவு செய்ய விமானப் படை திட்டமிட்டுள்ளது தெரிந்ததே.

ரஷ்யாவில் உள்ள கஸான் அல்லது உலன் உதே விமானப் போக்குவரத்து தொழிற்சாலையில் இருந்தே இந்த ஹெலிக்கொப்டர்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

தற்போது விமானப் படையினால் உபயோகப்படுத்தப்பட்டு வரும் மூன்று எம்.ஐ. 17 ஹெலிக்கொப்டர்களும் 45 லட்சம் அமெரிக்க டொலருக்குக் கொள்வனவு செய்யப்பட்டன. (ஒ-எ)

## தமிழகத்தில் பொலீஸார் அதி உஷார் நிலையில்!

### புலிகள் தாக்கலாம் என அச்சம்

சென்னை, ஜன. 17

தமிழகத்தில் பொலீஸார் அதிஉஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கிட்டு மறைந்த முதலாவது வருட நினைவு தினமான நேற்று விடுதலைப் புலிகள் தமிழகத்தில் தாக்குதல் எதனையும் நடத்தலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டதன் காரணமாகவே பொலீஸார் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

இதனைத் தொடர்ந்து— தமிழ்நாடு பொலீஸார் விடுதலைப் புலிகள் அனுதாபிகள் மற்றும் உறுப்பினர்கள் சிலரைக் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வார இறுதியில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது இவர்கள் கைதானார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-எ)

## தொண்டமான் இன்னும் விஜேயை சந்திக்கவில்லை

ஐ. தே. க —இ. தொ. கா. உறவில் நெருக்கடி ஏற்பட்ட பிறகு அமைச்சர் தொண்டமான் இன்னும் ஜனாதிபதி விஜேதுங்காவைச் சந்திக்கவில்லை.

நெருக்கடி நிலை பற்றி ஜனாதிபதியை சந்தித்து பேசினீர்களா?— என்று கொழும்புச் செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு — அமைச்சர் தொண்டமான்;

''ஜனாதிபதியை நான் சந்திக்க திகதி ஒன்றை ஒழுங்கு செய்து தருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எனக்கு உறுதியளித்திருந்தார். ஆனால் இன்னும் அதுபற்றித் தகவல் கிடைக்கவில்லை. சந்திப்புக்கான திகதி கிடைத்தவுடன் நான் எல்லா விஷயங்களையும் ஜனாதிபதியுடன் விவரமாகப் பேசுவேன்''— என்று பதிலளித்தார். (த-எ)

## இராணுவத் தளபதி ஜெரி யுத்த வெறியர் அல்லர்

### இப்படிச் சொல்கிறார் உபசபாநாயகர்

கொழும்பு, ஜன. 17

புதிய இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா யுத்த வெறியர் அல்லர். மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு யுத்தத்தின் உண்மை நிலைமை பற்றி எடுத்துரைத்த ஒரேஒரு மனிதர் ஜெரி டி சில்வாதான்.

உபசபாநாயகர் காமினி பொன்சேகா முன்கண்டவாறு பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

ஜெரி டி சில்வா ஒரு ''கௌபோய்'' அல்லர்; ஒரு நேர்மையான மனிதர் என்றும் அவர் கூறினார்.

''நான் இனவாதியோ, யுத்த வெறியனோ அல்லன். இந்த யுத்தத்தை நிறுத்தக் கூடிய வல்லமை படைத்தவனும் அல்லன்''—என்றும் உபசபாநாயகர் குறிப்பிட்டார். (ஒ-எ)

## நடமாடும் மருத்துவ பிரிவு 7 ஆயிரம் பேருக்கு சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜன. 17

விடுதலைப் புலிகளின் நடமாடும் மருத்துவப் பிரிவினர் கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் 6 ஆயிரத்து 90 பேருக்கு சிகிச்சை அளித்தனர்.

நவம்பரில் 2 ஆயிரத்து 538 பேருக்கும், டிசம்பரில் 3 ஆயிரத்து 552 பேருக்கும் சிகிச்சை வழங்கப்பட்டது.

கடும் மழை, வெள்ளம் ஏற்பட்ட காலத்தில் விடுதலைப் புலிகளின் நாடமாடும் வைத்தியப் பிரிவினர் இச் சேவைகளை வழங்கினர். (த-எ-51)

## தேர்தல் கடமையில் 5 ஆயிரம் பொலீஸார்

கொழும்பு, ஜன. 17

உள்ளூராட்சி சபைத் தேர்தல் காலத்தில் வவுனியாவில் பாதுகாப்பு நடவடிக்கைக்குப் பொறுப்பாக வடபிராந்திய பிரதி பொலீஸ் மா அதிபர் ரி. இ. ஆனந்தராஜா பொறுப்பாக இருப்பார்.

கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பாக பிரதிப் பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ இருப்பார்.

நான்கு மாவட்டங்களிலும் 5 ஆயிரம் பொலீஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

தேர்தல் நடைபெறவுள்ள இடங்களில் சில சம்பவங்கள் இடம் பெற்றன என தகவல் கிடைத்துள்ளது. எனினும் தேர்தலை நடத்துவதற்கு பாரதூரமான அச்சுறுத்தல் ஏதும் ஏற்படவில்லை என்று பொலீஸ் மா அதிபர் பிராங் டி சில்வா தெரிவித்தார்.

## லொறியை கட்டி இழுத்த 'கேபிள்' அறுந்தது!

### டிராக்டர் சாரதி மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 17

பழுதடைந்த லொறி ஒன்றை டிராக்டரினால் கட்டி இழுத்தபோது, கட்டி இழுக்கப் பயன்படுத்தப்பட்ட 'கேபிள்' அறுந்து டிராக்டர் குடை சாய்ந்தது. சாரதி உயிரிழந்தார்.

மல்லாகம் கோட்டடி வீதியில் கடந்த வெள்ளி நண்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சிங்கராசா அமுதராசா (வயது 38) என்பவரே மரணமானவராவார்.

வயாவிளான் தோலகட்டியைச் சேர்ந்த இவர் இடம்பெயர்ந்து மல்லாகத்தில் வசித்து வந்தார்.

இவரது சடலம் யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு, விசாரணையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (இ-15)

## இ. தொ. கா செயலாளராக புதியவர் நியமனம்?

கொழும்பு, ஜன. 17

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் திரு. செல்லச்சாமியின் இடத்துக்குப் புதிய சபாதுச் செயலாளராக கட்சியின் துணைத் தலைவரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் அமைச்சருமான திரு. எஸ். சதாசிவம் நியமிக்கப்படக் கூடும் என இ. தொ. கா. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தலைவர் தொண்டமானுக்கும் செயலாளர் செல்லச்சாமிக்கும் இடையே எழுந்துள்ள பூசல் சமரசமாக தீர்க்கப்படாவிடின் திரு. சதாசிவத்தைப் பொதுச் செயலாளராக நியமிக்க வேண்டும் என கட்சியில் பெரும்பாலானோர் கருத்துத் தெரிவித்து வருவதாகவும் —

தலைவர் தொண்டமானின் தீர்மானத்துக்கு முரணாகச் செயற்பட்டதின் திரு. செல்லச்சாமிக்கு கட்சியில் ஆதரவு குறைந்து வருவதாகவும்—

துணைத் தலைவர் திரு. எஸ். சதாசிவத்திற்கு கட்சியில் செல்வாக்கு அதிகரித்து இருப்பதாகவும் இ. தொ கா வுடன் தொடர்புடைய வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. [த-5-9]

“அப்பொயின்ற்மென்ற்” கேட்க வேண்டாம்:

# அம்மாவை சந்தித்துப் பேசுங்கள்; அனுராவுக்கு தேரர் ஆலோசனை!

கொழும்பு, ஜன. 17

''அம்மாவைச் சந்தித்துப் பேசுங்கள்''— அனுரா பண்டாரநாயக்காவுக்கு அஸ்கிரிய பீடாதிபதி சந்தானந்த தேரர் முன்கண்டவாறு ஆலோசனை வழங்கினார்.

அமைச்சராக பதவியேற்ற பின்னர் அனுரா கண்டி சென்று, அங்கு மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்து ஆசி பெற்றார். அப்போதே, அனுராவுக்கு இந்த ஆலோசனை வழங்கப்பட்டது.

''நீங்கள் உயரிய குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவர் அது உங்கள் பிதுரார்ஜிதம், அம்மாவைச் சந்திக்க 'அப்பொயின்ற்மென்ற்' கேட்டு காத்திருக்க வேண்டாம். அம்மாவை சந்தித்து அவருடன் பேசுங்கள்''— என்று சந்தானந்த தேரர் அனுராவுக்கு புத்திமதி கூறினார்.

''நீங்கள் இப்போது கட்சி மாறிவிட்டீர்கள்''— என்று சந்தானந்த தேரர் கூற—

''இல்லை நானாக மாறவில்லை. கட்சி மாற நான் நிர்ப்பந்திக்கப்பட்டேன். நானாக யு. என். பியில் சேரவில்லை. சுதந்திரக் கட்சியிலுள் நடத்தப்பட்ட சதியினால் நான் யு. என். பியில் சேரவைக்கப்பட்டேன்''— என்று அனுரா பதிலளித்தார்

ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் ஒன்று சேர்ந்தால் சிங்கள இனத்தை பாதிக்கும் சகல தீமைகளையும் ஒழித்துவிட முடியும் என்று சந்தானந்த தேரர் குறிப்பிட்டார்.

தாமும் இந்த ஆலோசனையை இவ்விரு கட்சிகளுக்கும் வழங்குவதாக அனுரா வும் கூறினார்.

## தமிழக முதல்வர் - ஜனாதிபதி புதுடில்லியில் சந்திப்பு

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா நேற்று முன்தினம் புதுடில்லியில் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

சென்னை ஜவகர்லால்நேரு அரங்கில் அடுத்த மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச தடகளப் போட்டிகளைப் தொடக்கி வைக்குமாறு அவர் குடியரசுத் தலைவரைக் கேட்டுக் கொண்டார் என்றும் —

குறிப்பிட்ட தினத்தில் தமக்கு வேறுபல அலுவல்கள் இருப்பதாகவும், அவற்றை மாற்றி அமைத்து இந்த அழைப்பை ஏற்றுக் கொள்ள முடியுமா என்பது குறித்து தகவல் தெரிவிப்பதாகவும் குடியரசுத் தலைவர் கூறியதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது. (த-5)

விமானத் தாக்குதலால்

## மணலாறு பாடசாலைகள் இயங்க முடியாத நிலை

யாழ்ப்பாணம், ஜன. 17

ஸ்ரீலங்கா விமானப் படை அடிக்கடி நடத்தி வரும் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் காரணமாக மணலாறு பகுதியில் உள்ள பாடசாலைகள் இயங்காத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விமானத் தாக்குதலுக்கு அஞ்சி மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் குந்தகமாக அமையலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## நரசிங்கம் இராசையா

(முன்னாள் பிரபல வர்த்தகர்)

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நரசிங்கம் இராசையா நேற்று (16-1-1994) காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான நரசிங்கம் முத்துப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும், இலட்சுமியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சின்னம்மா தம்பதிகளின் மருமகனும், சிவக்கொழுந்து, காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை ஐயம்பிள்ளை, சின்னம்மா, செல்லையா, ஆச்சிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரரும், பேரம்பலம் (பிரபல வர்த்தகர்), காலஞ்சென்ற மனோன்மணி, மனோராணி, பேரின்பநாதன் (ஜேர்மனி), மனோரஞ்சிதம், நாகேஸ்வரி, குகநாதன் [பிரபல வர்த்தகர்] தங்கேஸ்வரி, கோகிலநாதன் [டென்மார்க்], ஜேர்மனியில் காலஞ்சென்ற கமலநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திராலெட்சுமி, கனகலிங்கம் [பிரபல வர்த்தகர்], அமிர்தலிங்கம் (சுவிஸ்), நல்லையா [பிரபல வர்த்தகர்], முத்துலிங்கம் [சாரதி], லோகேஸ்வரநாயகி [ஜேர்மனி], இரட்னேஸ்வரி, சரவணபவான் [ருவிங் ஸ்ரார் பேக்கரி], மரியா [டென்மார்க்), ஆகியோரின் மாமனாரும், செல்லாச்சி [புங்குடுதீவு], செல்லம்மா, [புங்குடுதீவு], காலஞ்சென்றவர்களான செல்லாச்சி, செல்லையா, மாணிக்கம், இராமலிங்கம், காலஞ்சென்ற அரியபுத்திரன் [வர்த்தகர்], நாகம்மா, காலஞ்சென்ற திருநாவுக்கரசு [வர்த்தகர்], காலஞ்சென்ற சின்னக்கிளி, சபாரெட்ணம் (வர்த்தகர்) ஆகியோரின் மைத்துனரும், சுபேசன், சசி பிறேம், வதனி கமலினி, ரஜினி, கமல், சயன், சரன் [ஜேர்மன்[, சம்ஷா, தனுஷா, றபீஸ் [ஜேர்மன்], காலஞ்சென்ற சியாமளா, சதீஸ், தயன், சிந்து, தர்சினி, யசி, ரஜீவன், சஞ்ஜீவன், விதுர்சன், சுபேசன், கபில், திவான, நிரோ, சுரேகா, அனுசுயா(டென்மார்க்), ஆகியோரின் பேரனுமாவார்.

இன்று (17-1 1994) 11-00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று தகனத்திற்காக பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
பேரம்பலம்
[மகன்]

73, அம்பலவாணர் வீதி,
அத்தியடி. (28966)

## திருமதி தனலட்சுமி இரத்தினகோபால்

திருமதி தனலட்சுமி இரத்தினகோபால் 15-01-94 இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ் சென்ற திரு. க. இரத்தின கோபால் [முன்னாள் மில்க்வைற் தொழிலக நிறைவேற்று உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி பாக்கியலீலா விவைராஜா, தவகோபால், இராசகோபால், நந்தகோபால், திருமதி கமலாம்பிகை தெட்சணாமூர்த்தி [நோர்வே], சிவகோபால், [கனடா] விஜயகோபால், திருமதி யோகராணி சரச்சந்திரன் [கனடா], திருமதி பிறேமலதா கண்ணதாசன் [ஜேர்மனி], செல்வி நந்தினி, செல்வி ராகினி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
க. கனகராசா
[மில்க்வைற்]

[சி/5981]

## கார்த்திகேயக்குருக்கள் பொன்னுச்சாமிக்குருக்கள்

(மாகியப்பிட்டி மீனாட்சி அம்மன் தேவஸ்தான முன்னாள் ஆதீனகர்த்தா)

மாகியப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட கா. பொன்னுச்சாமிக்குருக்கள் நேற்றுக்காலை சிவபதம் அடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற காமாட்சி அம்மாவின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரியின் அன்புத் தந்தையும், கணேஸ்வாமியின் (மெய்கண்டான் அச்சகம்) அன்பு மாமனாரும், ரமணீகரன், சுதாகரன், வனஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16 - 1 - 94 ஞாயிற்றுக்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
க. இராஜேஸ்வரி
(மகள்)

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய். (6774)

## லில்லி இன்பமலர்

உடுவிலை பிறப்பிடமாகவும், நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லில்லி இன்பமலர் ஜேஜ் டேவிட் 13-01-94 அன்று பொலகாவலையில் காலமானார்.

இவர் திரு. யோஜ் டேவிட்டின் அன்பு மனைவியும், இன்பநாதன், அருந்ததி (உடுவில் மகளிர் கல்லூரி), சுந்தரநாதன் (ப.நோ கூ சங்கம், மானிப்பாய்), சவுந்தரநாதன் (கனடா), பத்மநாதன் (அசம்பிளி ஒவ் கோட் போதகர்), அமிர்தநாதன், டெபோறா (கணக்கு ஆய்வு நிறுவனம், திருநெல்வேலி), போல் ஜெயநாதன் (உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி நிர்மலா சுகந்தநாதன் (சங்கீத ஆசிரியர், சென். ஜேம்ஸ் ம.வி, குருநகர்), திருமதி சித்திரா சவுந்தரநாதன் (கனடா), திருமதி அமிர்தம் பத்மநாதன், திருமதி வசந்தா போல் ஆகியோரின் அன்பு மாமியும், அருணன், யோடன், யோடினா, நிசிலா, றெபேக்கா, ஏஞ்சலினா, யோஜ், சுரேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திரு. - திருமதி ... ஆகியோரின் மச்சாளும், மஞ்சுளா, தயாகரன், வத்சலா ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று 17-01-94 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
திரு. யோஜ் டேவிட்
(கணவர்)

''இன்ப பவனம்''
நவாலி தெற்கு,
மானிப்பாய். (28969)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 17-01-1994இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

யுத்த---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வக்கான எமது ஆவலை — நாம் தெளிவுபடுத்தி இருந்தோம்.

ஒரு நிரந்தர யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி, பொருளாதாரத் தடைகளை நீக்கி, மக்களுக்கு ஒரு சகஜமான வாழ்வு நிலையை தந்து, அத்தகைய ஒரு சமாதான சூழ்நிலையில் பேச்சு நடத்தலாம் என்ற எமது ஆலோசனையை நல்லெண்ணத் தூதுக் குழுக்கள் மூலம் அரசுக்கு நாம் தெட்டத் தெளிவாகத் தெரியப்படுத்தியிருந்தோம்.

சமாதான முயற்சிகளுக்கு நாம் தடையாக இருக்கவில்லை என எங்கள் தமிழீத் தேசியத் தலைவரும் பகிரங்கமாகத் தெரிவித்து அறிக்கைகளை வெளியிட்டிருந்தார்.

### யுத்த ஆண்டு பிரகடனம்

இந்நிலையில் தான் ஸ்ரீலங்கா அரசு இந்த ஆண்டை ஒரு யுத்த ஆண்டாகப் பிரகடனப்படுத்தியிருக்கிறது. மிகப் பெரிய எடுப்பிலான இராணுவ நடவடிக்கைகளுக்குத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். சமாதானத்துக்கு அரசு இணங்குமா என்பதையும் நாம் சிந்தித்து பார்க்க வேண்டும்.

ஆயுதங்களைக் கீழே போட வேண்டும்; தமிழீழக் கோரிக்கையை கைவிட வேண்டும்; தலைவர் பிரபாகரன் கொழும்புக்கு தனியே வந்து பேச வேண்டும்;— என்று எமது போராட்ட மரபுக்குப் புறம்பான நிபந்தனைகளை—அழுத்தங்களைப் போட்டு—சமாதான வாய்ப்புக்கு அரசு தடையாக இருந்து வருகிறது.

14 ஆயிரம் துருப்புக்களைப் பயன்படுத்தி தொடர்ச்சியான தாக்குதலுக்கு அரசு தயாராகி வருவதாகவும் செய்திகள் வெளியாகி உள்ளன.

### தோல்விகளை மறைக்க தாக்குதல் திட்டம்

அடுக்கடுக்காக அரசுக்கு ஏற்பட்ட தோல்விகளை மறைப்பதற்காக — சிங்கள மக்களுக்கு ஒரு வெற்றியைக் காட்டுவதற்காக —

ஒரு தற்காலிக வெற்றியை யாவது எட்ட வேண்டும் என்ற ஆவலோடு —

புதிதாகப் பதவியேற்றுள்ள இராணுவத் தளபதி மிகப் பெரும் தாக்குதல் திட்டம் ஒன்றைத் தீட்டித் கொண்டிருக்கிறார்.

கடந்த கால அனுபவங்களைக் கொண்டு — இராணுவத்துக்கு இழப்புக்கள் ஏற்படாத விதத்தில் — பல வழிகளிலும் தாக்குதல் நடத்த படையினர் முனைந்து கொண்டுள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில் எமக்கு இருக்கும் பாரிய கடப்பாட்டை ஒவ்வொரு தமிழ் மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த யுத்த பூமியில் நாள்தோறும் ஒவ்வொருவராக இறந்து கொண்டிருக்கிறோம்.

வீடு, சொந்தம், பந்தம் என்பவற்றோடு இங்கு சுதந்திரமாக வாழ வேண்டுமானால் எமக்கு நாடு அவசியம். எமக்கு அழிவுகளும், இழப்புக்களும் ஏற்பட்ட பின்னர் யுத்த முனைக்குச் செல்வதில் பயன் இல்லை.

### நாமும் எம்மை தயார்படுத்துவோம்

எமது பிரதேசத்தை ஆக்கிரமிப்பதற்கும், மக்களை அழிப்பதற்கும் சிங்கள அரசு முடிவு செய்துவிட்டது. அதற்கான ஆயத்தங்களை அது செய்து வருகிறது. இந்நிலையில் நாமும் எம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டியிருக்கிறது.

கடந்த காலத்தில் நாம் ஈட்டிய வெற்றிகள் நிரந்தரமாக்கப்படவேண்டும். நாம் அனைவரும் திரண்டு போராட வேண்டிய கட்டாயவேளை வந்திருக்கிறது.

கேணல் கிட்டு உட்பட இந்த வேங்கைகள் இறுதிக் கணத்தில் கண்ட கனவை நாம் நிறைவேற்றுவோம். —என்றார்.

கடற்புலிகளின் பொதுசனத் தொடர்புப் பொறுப்பாளர் திரு. மறவன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி மாலினி, கடற்புலிகளின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மூர்த்தி, மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஆகியோரும் அங்கு உரையாற்றினர்.

கூட்டத்தின் இறுதியில் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் ''சதியை வென்ற சாவுகள்'' என்ற இசை நாடகம் இடம்பெற்றது.

(உ-5-9...)

## நாளை

பொம்மைவெளி சிறுவர் போசாக்கு பராமரிப்புப் பூங்காவின் முதலாவது ஆண்டு நிறைவு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நிலைய மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

போரை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டும் என சிங்கள மக்களிடையே அபிப்பிராயத்தை உருவாக்குதல் அவசியம். அதற்கான ஆத்மிகத் துணிவு தேவை.

யுத்தத்தை நிறுத்தி பேச்சு மூலம் தீர்வு காண முயற்சிக்க வேண்டும்.

அதிகாரப் பரவலாக்கல் என்பது நாட்டைப் பிரிப்பது என்ற கருத்தே இன்று வேரூன்றியுள்ளது. இது தவறு.

பேச்சுவார்த்தைக்கு முன்னர் தெளிவாகக் கொள்கை விளக்கம் செய்யப்பட வேண்டும். இவை தேசிய, சர்வதேச மட்டத்தில் தெரிவிக்கப்படல் வேண்டும்.

வாக்குகள் குறித்தே அரசியல்வாதிகள் கவலைப்படுகின்றனர்; பயப்படுகின்றனர். அதனாலேயே தீர்வின்றி யுத்தம் நீடிக்கின்றது.

இது வரை யுத்தத்தில் இழக்கப்பட்ட வளங்கள் வீண் விரயம் என்பது தெளிவாகியுள்ளது.

எனவே யுத்தத்தை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் யுத்தத்தினால் ஏற்படும் அழிவுகளை மக்களுக்கு விளக்க வேண்டும். — என்றார். (உ-6)

பிரதமர்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வார்த்தை நடத்துவதற்கு திட்டம் ஒன்று தீட்டப்படல் வேண்டும். திட்டம் ஒன்றையும் தயாரிக்காமல் விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு எவ்வாறு அழைப்பது?

இந்த யுத்தத்தை இவ்வாண்டு முடிவதற்கு முன்னர் முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கிலேயே பிரதமர் இந்த அழைப்பை விடுத்திருக்க வேண்டும்.

அழைப்பு நிராகரிக்கப்படின் அரசு தனது சிறு சமரச முயற்சியையும் விடுதலைப் புலிகள் நிராகரித்து விட்டனர் என்று கூறக்கூடும். இதனால் அரசு தேசிய மற்றும் சர்வதேச அபிப்பிராயத்தை ஏற்படுத்தவும் எண்ணக்கூடும்.

— இப்படி அவர் தெரிவித்தார். (உ-எ-6)

மேலும்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிப் பிரமுகர், ஸ்ரீ. ல. சு. க. தலைமையிலான பொதுமக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த இரண்டு உறுப்பினர்களைச் சந்தித்து இரண்டு சுற்றுப் பேச்சுகள் நடத்தியுள்ளார் என்றும் —

அவர்களுக்கு பல உறுதி மொழிகளை அந்த ஐ.தே.க. பிரமுகர் வழங்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத் தூண்டிலில் அந்த எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சிக்குவார்களா என்பது இன்னும் நிச்சயமாகத் தெரியவில்லை.

ஜி. எம். பிரேமச்சந்திரா தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி — பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவை இணைந்த கூட்டணி வடமேற்கு மாகாண சபையில் ஆட்சியில் இருப்பது தெரிந்ததே.

மாகாணசபையில் —

இந்தக் கூட்டணிக்கு ஐக்கிய தேசியக் கட்சியை விட இரு உறுப்பினர்களே பெரும்பான்மையாக உள்ளனர்.

அந்தக் கூட்டணியின் இரு உறுப்பினர்களை தமது வலைக்குள் வீழ்த்துவதன்மூலம் வடமேற்கு மாகாணசபை நிர்வாகத்தைக் கைப்பற்றுவது அல்லது கலைத்து விடுவதே ஐ. தே. கவின் இலக்காகத் தெரிகிறது.

இதேபோன்று, மேல் மாகாணசபையை ஆட்சி செய்து வரும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி — ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி நிர்வாகத்தை கவிழ்ப்பதற்கும் அரசு முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அனுரா பண்டாரநாயகாவுக்கு நெருங்கியவரான — கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த — ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இது தொடர்பாக மேல்மாகாணசபையில் உள்ள, மேற்படி கூட்டணியைச் சேர்ந்த உறுப்பினர்களைச் சந்தித்து பேசி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண சபையில் ஆட்சி நடத்தும் எதிர்க்கட்சி கூட்டணிக்கு சபையில் 11 பெரும்பான்மை உறுப்பினர்கள் ...

## கயிறு உற்பத்தி நிலையம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 17

புதுக்குடியிருப்பின் மல்லிகைத்தீவுக் கிராமத்திலே அண்மையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் கயிறு உற்பத்தி நிலையம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேற்படி கிராமிய உற்பத்திக்குழு வட்டத் தொடர்பாளர் திரு. தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க இணையத் தலைவர் மங்கள விளக்கேற்றி வைக்க பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் விஜிதரன் அவர்கள் வைபவ ரீதியாக உற்பத்தி நிலையத்தை திறந்து வைத்தார்.

இதன் மூலம் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்த சுமார் 10 குடும்ப அங்கத்தவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. (த)

## தையல் பயிற்சி

இந்த ஆண்டு ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் ஒவ்வொரு தையல் பயிற்சி நிலையம் வீதம் அமைத்து கொடுக்கப்பட உள்ளதாக தெரிய வருகின்றது.

பயிற்சி நிலையத்தை நடத்துவதற்கு வசதியாக ஒவ்வொரு செயலர் பிரிவிலும் இலவசமாக பெறக்கூடிய கட்டடமொன்றினை பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-152)

எழுச்சிபொங்க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வுகள் நேற்று மாலை 5.30 மணியளவில் வல்வை திருவில் சதுக்கத்தில் இடம்பெற்றன.

நிகழ்வுகளை ஒட்டி அந்தப் பகுதிகள் எங்கும் விமானத் தாக்குதலுக்கு எதிரான — பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

கடற்புலிகளின் யாழ். மாவட்ட தளபதி திரு. ஈஸ்வரன் திருவிலில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து அஞ்சலி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

கேணல் கிட்டு பயணம் செய்த ''எம். வி. அகத்'' கப்பலின் ''கபின்'' போன்ற தோற்றத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவு மண்டபத்தை தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் திறந்து வைத்தார்.

வங்கக் கடலில் காவியமான வேங்கைகள் 10 பேரின் உருவப்படங்கள் அந்த மண்டபத்தினுள் வைக்கப்பட்டுள்ளன அவர்களது பெற்றோர், உறவினர்களும், பொதுமக்களும் அங்கு மலரஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலி நிகழ்வுகளைத் தொடர்ந்து வல்வையில் அமைக்கப்பட்ட கேணல் கிட்டுவின் பிரமாண்டமான உருவப்படம் (45 அடி உயர கட்அவுட்) திரை நீக்கம் செய்யப்பட்டது. கடற் புலிகளின் சிறப்புத்தளபதி திரு. சூசை அதனைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

கேணல் கிட்டு வடக்குத் திசையைச் சுட்டிக் காட்டி எமக்கு வடக்கே உள்ள இந்தியா குறித்து நாம் விழிப்பாக இருக்க வேண்டும் என எச்சரிப்பது போல அந்தப் பிரமாண்டமான உருவப்படம் அமைந்துள்ளது.

போராளிகளும், பொதுமக்களும் அந்த உருவப்படத்துக்கு மலரஞ்சலி செய்தனர். தொடர்ந்து நினைவுக் கூட்டம் வல்வை அம்மன் கோவில் வீதியில் இடம் பெற்றது. கூட்டத்தின் முடிவில் கேணல் கிட்டுவின் பெயர் பொறிக்கப்பட்ட பிரமாண்டமான வெளிச்சக் கூண்டு வானில் பறக்க விடப்பட்டது.

### சாவகச்சேரியில்

கேணல் கிட்டுஉட்பட பத்து வீர வேங்கைகளின் நினைவாக நிர்மாணிக்கப்பட்ட நினைவாலயம் சாவகச்சேரியில் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கத் தலைவர் திரு எஸ். சர்மா தலைமையில் திறப்பு விழா நடைபெற்றது.

கேணல் கிட்டுவின் உருவப்படத்தை அவரின் துணைவியார் ஆன் சிந்தியா திரை நீக்கம் செய்தார். குட்டிச் சிறியின் உருவப்படத்தை யாழ். மாவட்ட தளபதி செல்வராசா அவர்கள் திறந்து வைக்க. ஏனைய உருவப் படங்களை அவர்களது பெற்றோர்கள் திரைநீக்கம் செய்தனர்.

தொடர்ந்து நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

(அ-5-9-15-162-17-173-155-31-11)

## 'மகாபொல' உதவித் தொகை இரட்டிப்பாக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ். மாவட்டத்தில் வாழ்க்கைச்செலவு அதிகரித்துள்ளதால், மாணவர்களுக்கு வழங்கப்படும் மகாபொல உதவித் தொகையை இரண்டு மடங்காக உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உயர் கல்வி அமைச்சர் அனுரா பண்டாரநாயக்காவைச் சந்தித்த யாழ். பல்கலைக் கழக உப - வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவரிடம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

கடந்தவாரம் கொழும்பில் அமைச்சரைச் சந்தித்த சமயமே உப வேந்தர் இக் கோரிக்கையை விடுத்தார்.

யாழ். பல்கலைக் கழகத்துக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தேவையான காகிதாதிகள், எரிபொருள் வகைகளை எடுத்துச் செல்ல உள்ள தடையை நீக்க நடவடிக்கை எடுக்குமாறும் உப வேந்தர் கேட்டுக் கொண்டார். (உ-3)

## யாழ். பாடசாலைகளில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவது குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ். மாவட்ட பாடசாலைகளில் உள்ள ஆசிரிய வெற்றிடங்கள் நிரப்புவது குறித்து எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் வடக்கு - கிழக்கு புனரமைப்பு இணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்விடயம் ஆராயப்படவிருக்கிறது.

இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவிருக்கும் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், யாழ் கல்வி அலுவலகத்தில் ஆசிரிய வெற்றிடங்கள் குறித்துத்தாம் பெற்ற தகவல்களை அங்கு சமர்ப்பிப்பார்.

கொள்கை திட்டமிடல் அமைச்சு செயலாளர் திரு. பாஸ்கரலிங்கம் தலைமையில் இக் கூட்டம் நடைபெறும்.

## தேசிய பாடசாலை விவகாரம்; சந்திரிகாவின் விண்ணப்பம் அடுத்த மாதம் விசாரணை

கொழும்பு, ஜன. 17

ஒரு மாகாணத்தில் உள்ள பாடசாலை ஒன்றை அந்த மாகாண சபையுடன் கலந்தாலோசிக்காது தேசிய பாடசாலையாக மத்திய அரசு தரம் உயர்த்தியதை ஆட்சேபித்து மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு அடுத்த மாதம் மூன்றாம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இம்மனுவில்—

கல்வி, உயர் கல்வி அமைச்சர், கல்வி ராஜாங்க அமைச்சர், கல்வி அமைச்சுச் செயலாளர், கல்வி ராஜாங்க அமைச்சுச் செயலாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் பிரதிவாதிகளாகக் காட்டப்பட்டுள்ளனர்.

இம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

அரச பாடசாலைகள் மாகாணசபை நிர்வாகத்தின் கீழ் வருகின்றன. அவற்றை தேசிய பாடசாலைகளாக மாற்றுவதற்கு முன்னால் அது குறித்து மாகாணசபையுடன் மத்திய அரசு கலந்தாலோசனை நடத்தவேண்டும். பதின்மூன்றாவது அரசமைப்புத் திருத்தத்தின்படி கல்வித்துறை மகாணசபைக்கு பரவலாக்கல்பட்ட விஷயமாகும். எனவே மேல் மாகாணத்தில் உள்ள சில பாடசாலைகளை அந்த மாகாணசபையுடன் கலந்தாலோசிக்காது தேசியப்பாடசாலைகளாக்கியது அரசமைப்பு விதிகளை மீறிய செயலாகும்''— என்று முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சில பாடசாலைகளை தேசியப்பாடசாலைகளாக்கும் மத்திய அரசின் உத்தரவுக்கு தடை விதிக்கும்படியும் மனுவில் கோரப்பட்டுள்ளது. (த-எ)

## தொடர்ந்து கடமையாற்ற பணிப்பு

சண்டிலிப்பாய், ஜன. 17

தீவகப் பகுதியிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றி இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்து யாழ். பிரதேசத்திலுள்ள அரசினர் வைத்திய சாலைகளில் கடமையாற்றி வரும் ஊழியர்களை மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் தற்போதைய இடங்களில் கடமையாற்றுவதற்கு யாழ். பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அனுமதியளித்துள்ளார். (க-135)



## நன்றி நவில்கின்றோம்

எம்மால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஏனைய அபிமானிகள் அனைவருக்கும் எமது நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கலைத்தமிழ்க் கழகத்தினர்
நல்லூர். (28970)

உ

கொழும்புத்துறை மேற்கு
வதரிபீட மன்றுளாடும் பெருமான்

ஸ்ரீவிநாயகமூர்த்திப் பிள்ளையார் ஆலய
நிர்வாகசபை

## முக்கிய அறிவித்தல்

மேற்குறித்த ஆலயப் புனரமைப்பு வேலைகளுக்கேனும் அல்லது சப்பறம், மஞ்சம் போன்ற ஆலய வாகன மூர்த்திகள் அமைப்புக்கேனும் தேவை ஏற்படின் உள்ளூர்களில் அல்லது வெளிநாடுகளில் நிதி சேகரிக்கும் உரிமையும் பொறுப்பும் இந்த ஆலய நிர்வாக சபைக்கே உரியது. இன்று நிலவும் போர்க் காலச் சூழ்நிலையில் முன் குறிப்பிட்ட சேவைகளுக்கு நிதி திரட்ட இவ்வாலய நிர்வாக சபை சிந்திக்கவுமில்லை, தீர்மானிக்கவுமில்லை; அன்றியும் வேறு யாருக்கும் அத்தகைய சேவைகளுக்கு நிதி திரட்ட அனுமதியளிக்கவுமில்லை என்பதனைக் கொழும்புத்துறை மேற்கு வாழ் சைவப் பெருமக்களுக்கும் ஏனையோருக்கும் இத்தால் அறியத் தருகின்றோம்.

- டி ஆலய நிர்வாகம்.

இல. 7, இலந்தைக்குளம் வீதி,
கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம்.
12 – 01 – 1994 [28944]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org